சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.24.09.2024
OS.No.173/2019
PW 1 : நாராயணன் (வயது 79 ) த/பெ. சுந்தரரெட்டியார்.
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பாகம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன். நான் அ.வ.எண்.2939/1979 என்ற வழக்கில் தாக்கல் செய்த நிறைவேற்று மனு எண்.49/1999 மூலம் ஏலம் போன சொத்தில் ஏற்பட்ட ஏலத்தை ரத்து செய்ய இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஏலம் போன விவரம் தெரியவில்லை, அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் அருணாச்சலம் ரெட்டியார் மகன் சுந்தர ரெட்டியாருக்கு பாத்தியமானது. சுந்தர ரெட்டியாருக்கு நாராயணன், துரைசாமி, பங்காரம்மாள் ஆகிய 3 வாரிசுகள். துரைசாமி ரெட்டியார் பணம் கட்டவில்லை என சொல்லி தாவா சொத்து ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு இலால்குடி நீதிமன்றத்தில் நடந்ததுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாமல் இருந்தது. வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தை சகோதரி பங்காரம்மாள் எனக்கும், எனது சகோதரர் துரைசாமிக்கும் எழுதி கொடுத்துள்ளார். வா.சா.ஆ.1 பத்திரத்தில் சர்வே எண்.349/1 ல் மொத்தம் 4 ஏக்கர் 25 செண்ட்டில் 3 ஏக்கர் 36 செண்ட் காட்டப்பட்டுள்ளது. மேற்படி தாவா சொத்திற்கான அடங்கல் சிட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தேவையில்லை என்று நினைத்து போடவில்லை. எனது சொந்த ஊர் வாழையூர்.அது முதலில் இலால்குடி தாலுக்காவில் இருந்தது, தற்போது மண்ணச்சநல்லூர் தாலுக்காவில் உள்ளது. தற்போதைய வழக்கின் பிரதிவாதி தனலெட்சுமி மேற்படி அ.வ.எண்.2939/79 வழக்கை துரைசாமி ரெட்டியாருக்கு கொடுத்த கடன் வரவில்லை என்று அதனை வசூல் செய்வதற்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து வாழையூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்திற்கு பட்டா சுந்தர ரெட்டியார் பெயரில் உள்ளது. அந்த பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழைய ரெக்கார்டு வீட்டில் உள்ளது, தாக்கல் செய்யலாம். தாவா சொத்து சம்மந்தமான சிட்டா, அடங்கல் போன்றவற்றை கிராம நிர்வாக அலுவலரிடம் நான் கேட்கவில்லை. தாவா சொத்து சம்மந்தமான பட்டாவை தாசில்தாரிடம் கேட்டேனா என்றால் பட்டா உள்ளது. அதனை நான் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.5 ஆக 21.09.1926 ஆம தேதிய அ பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இதை தான் நான் பட்டா என்று கூறி வருகிறேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.5 ஆவணம் வாங்கி 2,3 வருடங்கள் இருக்கும். மெய்யம்மாள் எனது தாயார். வா.சா.ஆ.2 ஆவணம் எந்த

வருடம் ஏற்பட்டது என்றால் 1970 ல் ஏற்பட்ட ஆவணம். வா.சா.ஆ.2 விடுதலை பத்திரத்தை எனது சகோதரி பங்காரம்மாள் எங்களுக்காக எழுதி கொடுத்தது. அந்த ஆவணத்தில் மெய்யம்மாளுக்கு எழுதி கொடுத்ததாக இருந்தால் அது தவறானதா என்றால் இல்லை எனது அம்மாவிற்கு எழுதி கொடுத்ததாக இருக்கலாம். வம்சா வழி பட்டியல் வா.சா.ஆ.6 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தகப்பனாரின் வாரிசுகளை காட்டுவதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.6 ல் 3 தலைமுறைகளை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து அருணாச்சல ரெட்டியாருக்கு சம்மந்தம் இல்லை என்றால் தாவா சொத்துக்கள் அனைத்தும் அருணாச்சல ரெட்டியாரின் பூர்வீக சொத்துக்கள்.

**குறு.வி தொடர்ச்சி** - வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed /

நாராயணன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

R MOHANA

Digitally signed by R MOHANA
Date: 2024.09.24 17:05:30 +0530

சார்பு நீதிபதி

இலால்குடி